# நம் தேவன் வல்லவர்

மாட்சிமையின் ராஜா
மகிமையின் தேவன்
அவர் நாமம் உயர்த்துவோம்
என்றென்றும் போற்றுவோம்

ஒளியின் தேவன் அவர்
இருளை அகற்றும் கர்த்தர்
சகலமும் முடங்கும்
அவர் நாமம் போற்றிடும்

நம் தேவன் வல்லவர் பாடுவோம்
நம் தேவன் பரிசுத்தர் நாம் போற்றி பாடுவோம்
நம் தேவனை , ஆராதிப்போம்

என்றென்றும் ஆனவர்
ஆதி அந்தம் ஆனவர்
அவர் நாமம் சிறந்ததே
அவர் நாமம் சிறந்ததே

மூவரான ஏகா
திருத்துவ தேவா
யூத ராஜா சிங்கமே
அவர் அன்பின் ஜோதியே

ஈடில்லாத நாமம்
என் இயேசுவின் நாமம்
என் இதயம் துதிக்கும்
போற்றிடும் இயேசுவை